# மு.ராஜேந்திரனுக்கு 'சாகித்ய அகாடமி' விருது

**சென்னை, டிச. 23–**

முன்னாள் ஐ.ஏ.எஸ்., அதிகாரியும், எழுத்தாளருமான மு.ராஜேந்திரனுக்கு, 2022ம் ஆண்டுக்கான 'சாகித்ய அகாடமி' விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் சார்பில், இந்தியாவின், 24 மொழிகளில் வெளியாகும் சிறந்த படைப்புகளுக்கு, சாகித்ய அகாடமி விருதுகளை வழங்குகிறது. அந்த வகையில், 2022ம் ஆண்டுக்கான விருதாளர்களின் பட்டியல் நேற்று வெளியானது.

அந்தந்த மொழிகளுக்கான தேர்வுக் குழு பரிந்துரை அடிப்படையில், இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டதாக, சாகித்ய அகாடமி தலைவர் சந்திரசேகர கம்பார் தெரிவித்துள்ளார்.

அதில், ஏழு கவிதை நூல்கள், ஆறு நாவல்கள், இரண்டு சிறுகதை, மூன்று நாடகங்கள், இரண்டு இலக்கிய விமர்சனம், ஒரு சுயசரிதை கட்டுரைகள் ஆகிய நூல்களுக்கு, இந்த விருதுகள் அறிவிக்கப்பட்டன.

விருதாளர்களுக்கு 1 லட்சம் ரூபாய் ரொக்கம், செப்பு பட்டயம், பொன்னாடை ஆகியவை, டில்லியில் நடக்க உள்ள விழாவில் வழங்கப்படும்.



ராஜேந்திரன்

அதன்படி, திலகவதி, கலாப்ரியா எனும் சோமசுந்தரம், வெங்கடேஷ் ஆகியோர் அடங்கிய தேர்வுக் குழுவினர், தமிழில் முன்னாள் ஐ.ஏ.எஸ்., அதிகாரி மு.ராஜேந்திரன் எழுதிய, 'காலா பாணி' நூலை, விருதுக்கு தேர்வு செய்துள்ளனர்.

இப்புத்தகம், ஆங்கிலேயர்களை எதிர்த்து, தென் தமிழகத்தில் நடந்த காளையார் கோவில் போரை முன் வைத்து எழுதப்பட்ட நாவல்.

மதுரை மாவட்டம், வடகரை கிராமத்தைச் சேர்ந்த மு.ராஜேந்திரன், ஆங்கில இலக்கியத்தில் முதுகலை பட்டங்களுடன் முனைவர் பட்டமும் பெற்று, ஐ.ஏ.எஸ்., தேர்ச்சி பெற்றார்.

தமிழ் கல்வெட்டுகள், செப்பேடுகளை ஆய்வு செய்வதிலும், தமிழக வரலாற்றை ஆராய்வதிலும் ஈடுபாடு உள்ளவர்.

## மொழிபெயர்ப்பு விருது



நல்லத்தம்பி

மொழிபெயர்ப்பு நூல்களுக்கான விருது பட்டியலும் நேற்று வெளியிடப்பட்டது.

அதில், வங்காளம், ஹிந்தி, கொங்கணி, மைதிலி, மணிப்புரி, ஒடியா, சந்தாளி மொழிகளுக்கான விருதுகள் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில், கன்னட மொழியில் நேமிச்சந்திரா எழுதியுள்ள 'யாத் வஷேம்' எனும் நூலை, தமிழில் மொழிபெயர்த்த கே.நல்லத்தம்பிக்கு, இந்த ஆண்டின் மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாடமி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.